[1984 மார்ச் 13

இராயப்பேட்டை மருத்துவ மனையிலுள்ள இருதய சிகிச்சைப் பிரிவினை அபிவிருத்தி செய்யும் திட்டம்

298—(*வினா எண் 20612) திரு. செ. சிவசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை இராயப்பேட்டை மருத்துவ மனையின் இருதய நோயாளிகள் பிரிவை மேலும் அபிவிருத்தி செய்யும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இல்லை.

திருநாகேசுவரம் நவீன அரிசி ஆலையிலிருந்து வெளிவரும் கழிவு நீர்.

299—(*வினா எண் 21575) திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு சுற்றுப்புறச் சூழல் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் தொகுதி திருநாகேசுவரம் நவீன அரிசி ஆலையின் கழிவுநீர் வெளியேறித் துர்நாற்றம் ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) அருகாமையில் உள்ள நிலங்களில் இந்நீர் பாய்வதால் நிலம் களர் நிலமாக மாறுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருநாகேசுவரம் நவீன அரிசி ஆலையின் கழிவு நீர் பாய்ந்து அருகாமையில் இருக்கிற சன்னாபுரம், ஆண்டலான் பேட்டை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த விவசாய நிலங்களையெல்லாம் களர் நிலங்களாக மாற்றி, தற்போது விவசாயத்திற்கே லாயக்கில்லை என்று அவைச் சொல்லப்படுகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதைப் போக்குவதற்காக அந்த ஆலைக்குள்ளேயே செப்டிங் டாங்க் கட்டி, அந்தக் கழிவு நீரை வெளியே வராமல் பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழிவு நீரால் விவசாயம் பாதிகப்பட்டதாக என்னிடத்தில் குறிப்புகள் இல்லை. கழிவு நீரால் துர்நாற்றம் வீசப்படுதாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தக் கழிவு நீரை சுத்திகரித்து வெளியேற்றும்படி தொழிற்சாலயை வாரியம் வற்புறுத்தி உள்ளது.

1984 மார்ச் 13]

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்தக் கழிவு நீரால் விவசாய நிலங்கள் களர் நிலங்களாக மாற்றப்படுகிறது என்பது உண்மை. அது தடுக்கப்பட வேண்டும். அத்தோடு அந்த ஆலையிலிருந்து வெளியே வருகிற தூசி அருகாமையில் இருக்கிற குடியிருப்புப் பகுதிகளில் பரவி காச நோய் ஏற்படுத்துவதாகச் சொல்லப்படுகிறது. எனவே, நவீன முறைகளைக் கையாண்டு, அந்த ஆலையிலிருந்து தூசி வெளியே வராமல் தடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமான சட்டம் 1974 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டு, அது சீர்திருத்தம் செய்யப்பட்டு, நமது மாநிலத்தில் அமலுக்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது இது சம்பந்தமாக அந்தக் கழிவு நீரையும், ஏர் பொல்லூஷன் ஆவதையும் பரிசோதனை செய்து தக்க நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சிகளை வாரியம் எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை பீட்டர்ஸ் காலனியில் குடியிருக்கும் பத்திரிகையாளர்கள்.

300 —(*வினா எண். 20538)— திரு. கு. ரமணி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை பீட்டர்ஸ் காலனியில் வாடகைக் கொடுத்து குடியிருந்துவரும் 40 பத்திரிகை நிருபர்களுக்கு அந்த வீடுகளைச் சொந்தமாக்கிக் கொடுக்கும் செயற் குறிப்பு அரசுக்கு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதுபற்றி எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : (அ) இல்லை.

(ஆ) பீட்டர்ஸ் காலனியில் 35 குடியிருப்புகள் பத்திரிகையாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இக்குடியிருப்புகள் அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுள்ளன. எனவே, இக்குடியிருப்புகளை பத்திரிகையாளர்களுக்கு சொந்தமாக்கி கொடுக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.